TNPD110003802019

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 243/2019**
**வழக்கின் சுருக்கம்**

<table>
<tr><td>1.</td><td>எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம்</td><td>எதிரி 23.10.2018 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.</td></tr>
<tr><td>2.</td><td>இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>06.11.2019</td></tr>
<tr><td>3.</td><td>குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td>29.07.2026</td></tr>
<tr><td>4.</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td>அரசு தரப்பில் BNSS பிரிவு 348ன் படி CMP. No. 151/2026ல் தாக்கல் செய்யப்பட்ட மனு 25.02.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது</td></tr>
<tr><td>5.</td><td>அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>
<table>
<tr><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1– 16.02.2026</td><td>16.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2– 24.02.2026</td><td>24.02.2026</td></tr>
<tr><td>அ.சா.3– 25.02.2026</td><td>25.02.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>6.</td><td>BNSS பிரிவு 351(1) ஆ இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>07.03.2026</td></tr>
<tr><td>7.</td><td>எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்:</td><td>இல்லை</td></tr>
<tr><td>8.</td><td>தலைமறைவு எதிரி பற்றிய விவரம்</td><td>இல்லை</td></tr>
</table>



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:19:06 +0530

| | | |
|---|---|---|
| ೯. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை |

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 17:19:10 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**
**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.
**2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07ஆம் நாள் சனிக் கிழமை**
திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மாசி திங்கள் 23ம் நாள்
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 243/2019**
**(CNR NO-TNPD 11000380-2019)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி. எண். 243/2019 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | கந்தர்வக்கோட்டை நிலையம், குற்ற எண்.194/2018 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர், கந்தர்வக்கோட்டை காவல் நிலையம், |
| 4 | <u>**எதிரியின் விபரம்**</u><br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | மதன்குமார், வயது 28/2018<br>த/பெ. மெய்யூர்நாதன்,<br>லெட்சுமி நகர்,<br>S1, ட்ரினா பிளாட்,<br>காந்தி நகர், வலசரவாக்கம்,<br>சென்னை. |
| 5 | தேதி நாள் சம்பவம் | 18.10.2018 |
| 6 | முறையீடு | 18.10.2018 |
| 7 | கைது | 23.10.2018 |
| 8 | பிணையில் விடுவித்தல் | 23.10.2018 |
| 9 | விசாரணை துவக்கம் | 16.02.2026 |
| 10 | விசாரணை முடிவு | 25.02.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, எதிரி சட்டப்பிரிவு 304-A இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | காலதாமதத்திற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:19:17 +0530

இவ்வழக்கானது 06.11.2019 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 07.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக **அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர்** அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.C.ஜெகதீசன், M.L.,** அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 18.10.2018ம் தேதி பட்டியல் சாட்சி–1 வெள்ளிராஜா என்பவரின் தந்தையான இவ்வழக்கின் விபத்து சம்பவத்தில் இறந்துபோன கோபால் என்பவர், ஆயுத பூஜைக்கு பொருட்கள் வாங்க கந்தர்வகோட்டை சிவன் கோவில் ஆர்ச் அருகே, புதுக்கோட்டை – தஞ்சாவூர் சாலையில் மதியம் 02.50 மணிக்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி, இடது புறமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, மேற்படி அதே திசையில் எதிரி TN 10 AP 1027 என்ற பதிவெண் கொண்ட Maruthi Swift VDI என்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி கோபால் மீது மோதியதில் அவருக்கு பின் தலையில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே மரணத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவு 304–A இதசவின் கீழ் கந்தர்வக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 17:19:23 +0530

4. **குற்றச்சாட்டு :–**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரிக்கு எதிராக பிரிவுகள் 304–A இதசவின் கீழ் குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 13 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

6. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 வெள்ளிராஜா என்பவர் கடந்த18.10.2018ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–12 பிரபு என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவைப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.194/2018ல், சட்டப்பிரிவுகள் 304–A இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.3 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக பட்டியல் சாட்சி–12 காவல் ஆய்வாளர் மன்னர்மன்னன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

7. காவல் ஆய்வாளர் வழக்கின் கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.10.2018ம் தேதி இரவு 08.00 மணியளவில் சம்பவ இடம் சென்று அ.சா.2 பாலசுப்பிரமணியன் மற்றும் பட்டியல் சாட்சி–8 முனியாண்டி ஆகியோர் முன்னிலையில்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:19:29 +0530

சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

8. பின்னர் 19.10.2018ம் தேதியன்று தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன கோபால் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரை பிரேத விசாரணை செய்து அ.சா.ஆ. 6 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடிவந்த நிலையில், 23.10.2018ம் தேதி காலை 11.00 மணியளவில், தாமாக நிலையம் ஆஜரான எதிரி மதன்குமார் என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

9. புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் பட்டியல் சாட்சி–9 செந்தாமரை என்பவர் வழக்கு விபத்தை ஏற்படுத்திய காரினை ஆய்வு செய்து அ.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கியுள்ளார். பட்டியல் சாட்சி–10 மருத்துவர் வள்ளியப்பன் என்பவர் வழக்கில் இறந்து போன கோபால் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்து அ.சா.ஆ. 8 பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களுக்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்பதால், குவிமுச பிரிவு 294(3)இன் கீழ் மேற்படி ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் காவல் ஆய்வாளர் வழக்கின் விசாரணையை முடித்து, வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 304–A இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். அ.சா.3 வனிதா கந்தர்வகோட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:19:34 +0530

10. இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ) –ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**12. விவாதம்:–**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத் தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**13. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்தவிதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

14. இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:19:39 +0530

15. அரசு தரப்பில், கடந்த 18.10.2018ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன கோபால் என்பவர், ஆயுதபூஜைக்கு பொருட்கள் வாங்க கந்தர்வகோட்டை சிவன் கோவில் ஆர்ச் அருகே, புதுக்கோட்டை – தஞ்சாவூர் சாலையில் மதியம் 02.50 மணிக்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி, இடது புறமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, எதிரி மேற்படி அதே திசையில் TN 10 AP 1027 என்ற பதிவெண் கொண்ட Maruthi Swift VDI என்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி கோபால் மீது மோதி விபத்து ஏற்படுத்தி அவருக்கு மரணத்தை ஏற்படுத்தியதாகஎதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 வெள்ளிராஜா என்பவர் கடந்த18.10.2018ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–12 பிரபு என்பவரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவை பரிசீலனை செய்ததில், அ.சா.1 தந்தை கோபால் என்பவர் 18.10.2018ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் கந்தர்வகோட்டைக்கு சென்று ஆயுதபூஜைக்கு பொருட்கள் வாங்கி வருவதாக கூறி சென்றதாகவும், மதியம் சுமார் 2.50 மணியளவில் புதுப்பட்டியை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவர் தனது தந்தை கந்தர்வக்கோட்டையில் காரில் அடிப்பட்டு இறந்துவிட்டதாக தகவல் கூறியதாகவும், தான் ஊரிலிருந்து உடனே புறப்பட்டு சம்பவ இடம் வந்து பார்த்ததாகவும், தனது தந்தை இறந்து கிடந்ததாகவும், சம்பவம் பற்றி அருகில் இருந்தவர்களிடம் விசாரித்ததாகவும், அதில் தனது தந்தை கந்தர்வகோட்டை சிவன் கோவில் ஆர்ச் அருகில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டின் ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த TN 10 AP 1027 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஸ்விப்ட் காரினை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து தனது தந்தை மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாக தெரிய வந்ததாகவும் குறிப்பிட்டு புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:19:45 +0530

17. வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு கொடுத்துள்ள வெள்ளிராஜா என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 2018 ஆம் ஆண்டு, தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், தனது தந்தை ஆயுத பூஜைக்கு பொருட்கள் வாங்குவதற்காக கந்தர்வக்கோட்டைக்கு வந்ததாகவும், தான் கல்லுக்காரன்பட்டியில் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது, கோவிந்தராஜ் என்பவர் தனக்கு போன் செய்து, தனது தந்தை கந்தர்வக்கோட்டையில் விபத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னதாகவும், தான் உடனே கந்தர்வக்கோட்டை வந்ததாகவும், அதற்குள் தனது தந்தையை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டதாகவும், தான் அங்கு சென்று இறந்து போன தனது தந்தையை பார்த்ததாகவும், மறுநாள் காலையில், இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த புகார் மனு தான் கொடுத்தது என்றும், போலிசார் மருத்துவமனை வந்து, இறந்து போன தனது தந்தையின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், தானும் உடன் இருந்தேன் என்றும் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18. பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.2 பாலசுப்பிரமணியன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 18.10.2018 ஆம் தேதி, இரவு சுமார் 08.00 மணிக்குள், கந்தர்வக்கோட்டையில் உள்ள சிவன் கோவில் ஆர்ச் அருகில் தானும் முனியாண்டி என்பவரும் பானிபூரி கடையில் பானிபூரி சாப்பிட்டுக் கொண்டிருந்தோம் என்றும், அப்போது, அங்கு காவல் ஆய்வாளர் அன்றைய தினம் மதியம் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் என்றும், தானும் முனியாண்டி என்பவரும் அதில் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது என்றும், போலீசார்

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:19:52 +0530

தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

19. அ.சா.5 காவல் ஆய்வாளர் வனிதா வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் பிரபு கடந்த 18.10.2018 ஆம் தேதி கந்தர்வக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, வெள்ளிராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்துள்ளது குறித்தும், பின்னர் வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் மன்னர்மன்னன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளது குறித்தும், காவல் ஆய்வாளர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலசுப்பிரமணியன் மற்றும் முனியாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளது குறித்தும், பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளது குறித்தும், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இறந்து போன கோபால் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்துள்ளது குறித்தும், எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளது குறித்தும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் செந்தாமரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளது குறித்தும், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று இறந்து போன கோபால் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் வள்ளியப்பன் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளது குறித்தும், வழக்கு விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. அரசு தரப்பு வழக்கில் வழக்கு விபத்தில் இறந்துபோன கோபால் என்பவர், ஆயுத பூஜைக்கு பொருட்கள் வாங்க கந்தர்வகோட்டை சிவன் கோவில் ஆர்ச் அருகே,



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:19:58 +0530

புதுக்கோட்டை – தஞ்சாவூர் சாலையில் மதியம் 02.50 மணிக்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி, இடது புறமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, எதிரி மேற்படி அதே திசையில் TN 10 AP 1027 என்ற பதிவெண் கொண்ட Maruthi Swift VDI என்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி கோபால் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகார் மனுவிலும் அவ்வாறே கூறப்பட்டுள்ளது.

21. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 2018 ஆம் ஆண்டு, தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், தனது தந்தை ஆயுத பூஜைக்கு பொருட்கள் வாங்குவதற்காக கந்தர்வக்கோட்டைக்கு வந்ததாகவும், தான் கல்லுக்காரன்பட்டியில் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது, கோவிந்தராஜ் என்பவர் தனக்கு போன் செய்து, தனது தந்தை கந்தர்வக்கோட்டையில் விபத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னதாகவும், தான் உடனே கந்தர்வக்கோட்டை வந்ததாகவும், அதற்குள் தனது தந்தையை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.1 வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பது தெரிய வருகிறது. அரசு தரப்பில் எதிரிக்கு குற்றச்சாட்டை நிரூபணம் செய்வதற்கு வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கப்படவில்லை.

22. வழக்கு விபத்து சம்பவத்துடன் எதிரியை தொடர்புப்படுத்துவதற்கு எவ்வித நேரடி சாட்சியங்கள் இல்லை என்பதாலும், வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு கொடுத்துள்ள அ.சா.1 வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி இல்லை என்பதாலும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் வைத்து, எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்ய இயலாது. எனவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:20:04 +0530

**23. முடிவாக, எதிரி சட்டப்பிரிவுகள் 304–A இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

24. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 07.03.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:20:08 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:–</u>**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு. வெள்ளிராஜா | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. பாலசுப்பிரமணியன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.3 | செல்வி. வனிதா | கூடுதல் சாட்சி (காவல் ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| சான்று ஆவணங்களின் வரிசை | தேதி | சான்றாவணங்களின் விபரம் | யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 16.02.2026 | புகார் மனு | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.2 | 24.02.2026 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | 25.02.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | 25.02.2026 | பார்வை மகஜர் ஏற்கவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 25.02.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | 25.02.2026 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | 25.02.2026 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.8 | 25.02.2026 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.3 |

**<u>அரசுத்தரப்பு சான்று பொருட்கள்</u>:** இல்லை

**<u>எதிரியின் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்:</u>** இல்லை.

**<u>குறிப்பு</u>**

1. எதிரி 23.10.2018 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3.இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் இல்லை.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 17:20:13 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**